# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூ௫] யாழ்ப்பாணம்:- நந்தன வஹ சித்திரை மீ கஎ உ செவ்வாய்க்கிழமை (29 April 1952) [இல - எ]


திருத்தொண்டர் திருநாள்

## மெய்ப்பத்தர்கள்பாற் . பேரன்புடையார்

### விறன்மிண்ட நாயனர் மேன்மை

சோ நாட்டிலுள்ள ஊர்களிற் சிறந்த ஊராகிய செங்குன்றூரிலே வேளாளர் குலத்திலே விறன்மிண்ட நாயனர் பிறந்தார். அவர் "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்-பற்றுக பற்று விடற்கு" என்றபடி சிவபிரானுடைய திருவடிகளையே இறுகப் பற்றிய பேரன்புடையாராய் அகப்பற்றுப் புறப் பற்றுக்களை நீக்கி அடியார பத்தில் மிகச்சிறந்து விளங்கினர்.

"செம்மலர் நோன்றாள் சேரலொட்டா — வம்மலங் கழீஇ — யன்பரொடு மரீஇ — மாலற நேய மலிந்தவர் வேடமு-மாலயந் தானு மரனெனத்தொழு மே" என்ற முதனூன்முறைமையிற் பார்ப்பட்டிருத்தல் உற்று நோக்கத்தக்கது.

"அப்பொற் பதியி
னிடைவேளாண் குலத்தை
விளக்க அவதரித்தார்;
செப்பற் கரிய பெருஞ்சீர்த்திச்
சிவனார் செய்ய கழல்பற்றி,
எப்பற் றினையும் அறஎறி
வார் எல்லை தெரிய ஒண்ணு
தார், மெய்ப்பத் தர்கள்பாற்
பரிவுடையார்; எம்பி ரானர்;
விறன்மிண்டர்."

அவர் சிவஸ்தலங்களுக்குச் சென்றபொழுதெல்லாம் சிவனடியாரை முன் வழிபட்டுப் பின் சிவபெருமானை வணங்குகின்ற வழக்கமுடையவர். ஒருநாள திருவாரூருக்குச் சென்று வணங்கினர். அங்கே தேவாசிரிய மண்டபத்திலே சிவனடியார்கள் எழுந்தருளியிருக்க அவர்களை வணங்காது சிவபெருமானைச் சுந்தரமூர்த்தி நாயனர் வணங்குவதைக்கண்டு "அடியாரை வணங்காது செல்கின்றவன் வன்றொண்டன் அவ்வடியார்களுக்குப்புறகு; அவனை ஆட்கொண்ட பரமசிவனும் புறகு" என்றார். அவருடைய அடியார் பத்திச் சிறப்பைக் கண்ட சுந்தரமூர்த்தி நாயனர், அவ்வடியார்மீது திருத்தொண்டத் தொகை பாடினர். விறன்மிண்ட நாயனர் மனம் மகிழ்ந்தது.

இவ்வாறு சிவபத்தி சிவனடியார் பத்தியிற் சிறந்துவிளங்கிய தன் பேருகச் சிவபெருமானது திருவடி நீழலிலே சிவகணநாதருக்குத் தலைவராகும் பேற்றைப்பெற்றார்.

"ஒக்க நெடுநாள்
இவ்வுலகில் உயர்ந்த
சைவப் பெருந்தன்மை,
தொக்க நிலைமை
நெறிபோற்றித் தொண்டு
பெற்ற விறன்மிண்டர்,
தக்க வகையால்
தம்பெருமான் அருளி
னாலே தாழ்கிழற்கீழ்,
மிக்க கணநா
யகராகுந் தன்மை
பெற்று விளங்கினர்."

இந் நாயனர் அகப்பற்றுப் புறப்பற்றுக்களை நீக்கி அரன் மீதும் அரனடியார் மீதுங் கொண்ட பேரன்புடைமை

---

உ

## மனத்தினுல் நினைந்தபோது அவர் நமக்கு இனியர் !

திருச்சிற்றம்பலம்

நீற்ருரும் மேனியராய் நினைவார்தம் உள்ளத்தே நிறைந்து தோன்றும்
காற்ருனைத் தீயானைக் கதிரானை மதியானைக் கருப்பறியலூர்க் [யில்
கூற்ருனைக் கூற்றுதைத்துக் கோல்வளையாள் அவளோடுங்கொகுடிக்கோ
எற்ருனை மனத்தினுல் நினைந்தபோ தவர்நமக் கினியவாறே.

திருச்சிற்றம்பலம்

---

### நினைவு விழா

23-4 52 புதன்கிழமை மாலை 6 மணியளவில் சுதுமலை சின்மய பாரதி வித்தியாசாலையில் பண்டிதர் ஆ.சி. நாகலிங்கப்பிள்ளை அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது. விஸ்வநாதபிள்ளையவர்களின் வாழ்க்கையின் சிறந்த அம்சங்களைத் தலைவர் அவர்கள் தமது முன்னுரையில் கூறினர்கள். ஆசிரியர்கள் S சுப்பிரமணியம், K. தம்பிராசா என்பவர்கள் அவரின் சரித்திரத்தின் பிரதானபகுதிகளைக்கூறினர்கள். தலைவர் அவர்கள் ஈற்றில் எல்லோருக்கும் நன்றிகூறினர்கள். அத்துடன் சுதுமலையில் வாழ்ந்து மறைந்த இரண்டு அருட்புலவர்களின் வாழ்க்கைகளைக் கவனிக்க வேண்டுமென வாலிபர்களைத்தலைவரவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

---

திருத்தொண்டர் திருநாள்

## தென்னர் குலப்பழி தீர்த்த பாவை

### மங்கையற்கரசியார் மகிமை

பூசரர்கு லாமணியாம் புகலியமணியாம் புகலி வேந்தர்
போனகஞா னம்பொழிந்த புனித வாக்கால்
தேசுடைய பாடல்பெறுந் தவத்தினரைச் செப்புவதியா
மென்னறிந்து தென்னர் கோமான்
மாசில் புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ வழித்துணையாய்
நெடுங் காலம் மன்னிப் பின்னை
ஆசில்நெறி யவரோடுங் கூட ஈசர் அடிநிழற்கீழ்
அமர்ந்திருக்க அருளும் பெற்றார்.

மங்கையற்கரசியார், மதுரையிலிருந்த நெடுமாறநாயனருக்கு வாழ்க்கைத்துணையாயிருந்து சைவத்திருநெறிப் பரிபாலனத்தில் அவருக்கு வழித் துணையாய் நின்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் சிறப்பித்துப்பாடும் பேறு பெற்றுத் திருஞானசம்பந்த மூர்த்திநாயனருடன் சிவபரம் பொருளின் திருவடிப்பேற்றையும் பெற்றார்.

---

அரசியல் அலை

## வாக்குப்பிச்சை கேட்பவர்கள் போக்குப் பலவேறு?

### ஒன்ருய் உழைத்தவர்கள் இன்று விரோதிகள்!

### உடன் பிறந்தார் உற்ருர் என்ற நோக்கில்லை

இன்று இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் அபேட்சகர்கள் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர். சென்ற தேர்தலில் ஒன்ருயிருந்தவர்கள் இன்று எதிர்நின்று தெரிவுப் போர் செய்யும் நிலைமை குறிப்பிடத்தக்கதாயிருக்கின்றது.

"உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம்"

உடன் பிறந்தார் ஒருவரோடொருவர் பொருதுகின்றனர்; ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்து வெவ்வேறு கட்சியினில் நிற்கின்றனர். இடதுசாரிக் கட்சித்தலைவருள் ஒருவரான திரு. பிலிப் குணவர்த்தனவின் மனைவியாரும், அவரது சகோதரன திரு. ரேவேட் குணவர்தனவும் எதிர்க் கட்சியினில நின்று வெவ்வேறு இடங்களிற் போட்டி இடுகின்றனர்.

திருமதி. R. E. ஜயதிலகவும் அவரது சகோதரன் திரு. எட்மண்ட் சமரக்கொடியும் அவ்வண்ணமே!

ஆப்த நண்பர்களான திரு. டட்லி சேனநாயகவும் திரு. பண்டாரநாயகவும் எதிர்கட்சியினர் ஆனர்கள். அதுபோன்று திரு. G. G. பொன்னம்பலமும் திரு. S. J. V. செல்வநாயகமும். இவ்வாறு இன்னமும் பலர் பழைய கட்பு விட்டுப் புதிய சகாக்களைத் தேடி உள்ளார்கள்.

கட்சிகள் பெருகிவிட்டன!

பிரிந்தவர்களும் சிலர் ஒருங்கு சேர்ந்துள்ளனர். 'சனநாயகத் தேர்தலிலே, ஒரு இரத்தம், ஒரு சமுகம் என்ற பேதமில்லா திருப்பது உண்மையே.


தொடர்ச்சி 4-ம் பக்கம்


---

## சைவ ஆலயங்களைச் செவ்வனே நடத்துங்கள்!

### புனித புண்ணிய நிலையங்கள் பொலிக

சைவமக்களாகிய நாம் ஆன்ம ஈடேற்றமடைவதற்கு ஆவசியகமாக வேண்டப்படுவது ஆலய வழிபாடாகும். சைவ ஆலயங்களிலே ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும்பொருட்டு இறைவன் சாநித்தியராய் எழுந்தருளியிருப்பர். அந்த இறைவனை வழிபடுவதற்காகவே இந்த மனிதப்பிறவி இறைவனால் எமக்குக் கொடுக்கப்பெற்றது இதனை நாம் அனைவரும் மறந்து எங்கள் சைவக் கோயில்களை மிகவும் கேவலம் அடையவிட்டு விடுகின்றோம்.

சைவத்தை வளர்க்கமுன் வருபவர்கள் எத்தனைபேர் சைவத்திற்காகத் தொண்டுபுரிபவர்கள் எத்தனைபேர் ஆனல் அவர்கள் எவராயினும் சைவ மதத்தவர்களுக்கு முதல் வேண்டியதாகிய சைவ ஆலயங்களைச் சீரிய முறையில் நடத்தாது வாளாவிருப்பார்களேயானல் சைவமதம் ஓங்குவதெப்படி? சைவ மக்களாகிய நாம் ஈடேறுவதெப்படி?

ஒரு கிராமத்துக்கு ஒரு ஆலயம அல்லது இரண்டு ஆலயம் திருப்தியாகும். ஒவ்வோர் கிராமத்திலும் மிகப் பல கோயில்கள் வைத்து நடத்துகின்றார்கள். இதனல் ஒரு கோவிலாயினும் நல்லமுறையில் நடைபெற முடியாமல் அல்லற்படுவதை நாம் நேரில் காணக்கூடியதாக விருக்கின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக எங்கள் தெல்லிப்பழையில் அநேக ஆலயங்கள் உண்டு. சில சிறப்பாக நடைபெறுகின்றன. அநேகமானவை கிலமுற்று ஒரு காலப் பூசைதானும் நடைபெறவியலாது இருக்கின்றன.

பிரம்மஸ்ரீ
சி. கணேசலிங்க ஐயர்
அவர்கள் எழுதியது.

சைவப் பெருமக்களே! இது மாத்திரமா கடவுளுடைய குழந்தைகளாகிய ஆடு கோழிகளைக் கடவுளுடைய சன்னிதானத்தில் வெட்டுகின்றார்களே! என்னே இவர்களின் செயல் "அம்மாவெனவலற [illegible] கின்றார் அம்மாவெனுஞ் சத்தங் கேட்டகன்ற மாதவர்க்குப் பெரய்மாகிரயமென்ருற் புசித்தவர்க்கென் சொல்லுவதே" என்னும் (பதி பசு பாச விளக்கம்) இப் பாட்டைத்தானும் இவர்கள் படிக்கதில்லையா? கேட்டதில்லைரா? இக்குற்றங்களை நீக்கிச் சைவக் கோவில்களைச் சிறப்பாக நடத்தவேண்டியது சைவமக்களது முதற் கடனகும்.

இளைஞர்கள் உணர்தல்வேண்டும்!

இனி இக்கால இளைஞர்களோவெனின் "ஆலயந்தொழுவது வேலை.நினைக்கேடு" என்றும் ஆலய வழிபாட்டினலே ஒரு பிரயோசனமும் இல்லையென்றும் கூறித் தம் சமயத்தை இகழ்கின்றார்கள். இவர்கள் இவ்வாறு இகழ்வதற்குக் காரணம தமிழுக் கல்வியையும் சமயக்கல்வியையும் நன்கு சந்தேகவிபரீதமறக் கற்காமையென்று நாம் ஊகிக்கவேண்டியிருக்கின்றது.

ஆகவே சைவப் பெரியோர்களே! சைவ நன்மக்களே! தருமசிலர்களே! சைவஇளைஞர்களே! நீங்கள் அனைவரும் கூர்ந்து யோசித்துச் சைவக் கோயில்களின் கேவலநிலையைப் போக்கி, அங்கு நடைபெறும் தீச் செயல்களையும நீக்கி, இறைவன் சந்நிதானதைப் புனித ஸ்தானமாக விளக்கும்படி செய்வீர்களாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். நந்தன ஞூ சித்திரை மீ
கஎ உ செவ்வாய்க்கிழமை


## வாக்குப் பெறும் வழி ?

செம்பொன் அல்ல, செழுமையான நிலம் அல்ல ஒருவன் தேர்தற் காலத்திற் பெரிதாக மதிப்பது. அளத்தல் அளவைக்கடங் காததும் உருவமில்லாததும் ஒன்று உண்டு. அதுவே விலைமதித்தற்கரிய உடைமை. சனநாயக ஆட்சியின் ஞாபக சின்னமாக வுள்ள வாக்குரிமை என்னும் இந்த அரும் பெறற்பாக்கியத்தை உடையவர்கள் அதை வழங்க வேண்டிய வழி வழங்குவதா? அன்றி விரும்புகின்றவர்கள் எவ்வாற்றானும் அதைப் பெற்றுக்கொள்ள முனைந்து நிற்பதா? எது பழந் தமிழ் மரபுக்கும் இக்கால அரசியல் ஞானத்திற்கும் இயையத்தக்கது! என்று ஆராய்வது வேண்டியதாகின்றது.

தமிழ்ப் பண்பாட்டைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்த வள்ளுவமாநாவலர் "நல் ஆறு எனினும் கொளல்தீது" என்று இரத்தலை இழிமையாகக் கூறிப்போந்தனர். ஆகவே வாக்குரிமை பெற்றான் ஒருவனை அபேட்சகர்கள் காலையும் மாலையும் வீதியிலும் வீட்டிலுமாக ஆசைவார்த்தை கூறி அவனிடம் அதனை இரந்துபெறுதலா? அன்றி அபேட்சகர்களையும் அவர்களுடைய கொள்கைகளையும் அன்னவன் சீராய் ஆராய்ந்து தக்காராய் உள்ளார் ஒருவருக்குத் தாமாகவே உரியமுறையில்உற்ற இடத்தில் வழங்கி 'மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று' என்ற தமிழ் மரபின் வரம்பு கடவாது ஒழுகுவதா? இதில் எது விரும்பத் தக்கது எதை விலக்க வேண்டியது என்று நாம் சொல்லவும் வேண்டுங்கொல்.

எங்ஙனம் விலைமதித்தற்கரிய உரிமையாக இந்த வாக்களித்தல் இருக்கின்றதோ அங்ஙனம் அதை வழங்கும் முறை ஒழுக்க நெறிக்கமைவாக வேண்டுமென்பது நியாயமே. உண்மை இவ்வாறிருப்பவும், வாக்காளர்களை வஞ்சகச்சூழ்ச்சியாலும் வல்லடி வழக்காகவும், அபேட்சகர்களின் வேண்டுகோளுக்கியையச் செய்தல் அறநெறியை அடிப்படையா

# கட்சிகளுக்குள் கபட நட்பு!

## அமைதி அரசியல்நிலையா ஆரவாரமா?

## எது வேண்டும் மதப்பற்றுள்ள இத்தேசத்துக்கு?

கனவிலேதானும் ஒற்றுமைப்பாடு இருக்க முடியாத நேர் விரோதக் கொள்கைக் கட்சியினர் அகில இந்தியத் தேசிய மகாநாட்டை அடக்கி ஒடுக்கும் ஆகாத முயற்சியில், சென்னையில் ஒன்று சேர்ந்ததும் அதைக் கண்டு அரசியல் ஞானி ஸ்ரீ ச. இராசகோபாலாச்சாரியாரை தமிழ்நாடு ஓலமிட்டழைத்ததும், வஞ்சகக் குழுவினரின் சூழ்ச்சியினின்றும் தாய்நாட்டை விடுவிக்க வயயோதிபத்தையும் பாராது இராஜாஜிப் பெரியார் வெளிவந்ததும் இப்போதைய சம்பவங்கள் இவற்றை இலங்கை அரசியல்நிலைமையில் அமைத்துப் பார்ப்பது அவசியமாகின்றது!

இந்தக் கருத்தமைய விகட வியாக்கியானச் சித்திர வல்லுநர் ஒருவர் (Cartoonist) ஆங்கிலத் தினசரிப்பத்திரிகையில் ஒரு படம் வரைந்திருக்கின்றார். நெஞ்சில் ஒற்றுமைப்பாடில்லாத திரு. பண்டாரநாயகவும் Dr. N. M பெரேராவும் தங்கள் கால்களில் ஒவ்வொன்றைப் பிணித்துக்கொண்டு பந்தயம் ஓட எத்தனிக்கின்றார்கள். மனமில்லா மற்றைய கால்கள் அசைகின்றன இல்லை. தள்ளாட்டம் ஏற்படுகின்றது இது போலவே மற்றைய கட்சிகளின் கபட நட்பும் இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

### சகுனப் பிழைதேடும் சகுனிகளா?

புத்த சிங்கள நிர்வாகம் நாட்டக் கங்கணங் கட்டி நிற்கும் திரு. பண்டார நாயகவுடன் மதப்பற்றற்ற இடதுசாரிக் கட்சிகள் சேர்ந்து நிற்பது, எதிரியாகிய ஐக்கிய தேசியக்கட்சியின் சகுனப் பிழைக்காக தங்கள் கொள்கைகளாகிய நாசிகளை நாசஞ் செய்வதாகும்! இவ்விதமே நாட்டின் நலத்தையும், கொள்கையின் இலக்கையும் அப்புறம் எறிந்துவிட்டுத் தங்கள் மனத்தெழும் பொறாமை வெகுளி ஆதியாம் தீய குணங்களின் வசத்தராய் அரசியற் கட்சித் தலைவர்கள் சகுனிகளாக நடித்தல் இலங்கை நாட்டின் மாபுக்கு முரணானது!

### கக்கொண்ட தமிழ் நாட்டு மக்களுக்கு மரபாகாதே!

அபேட்சகர்கள் எவர்களுமே வாக்குப்பெறப் பிரயத்தனஞ் செய்யக்கூடாதென்றும், வாக்காளர்கள் தாமாகவே கட்டாயமாகத் தங்கள் வாக்குக்களை மனம்போனவாறு அளித்துவிட வேண்டும் என்றும் சட்டப் பிறந்தால் நிலைமை மாறிவிடும் என்பதற்கையமில்லை. ஒரு நாட்டின் அரசாங்கக் கொள்கை எவ்வாறிருக்க வேண்டுமென்ற ஆராய்ச்சியைக் கொண்ட தேர்தலிலே வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைத் தாமாகவே உணர்ந்து கொடுக்கப்போதிய வசதிகளைச் செய்து வைப்பதா அன்றி ஏமாற்றமான விபரீதமான விளக்கங்களை அவர்கள் கொள்வதற்கு முறைகேடான, வாய்மை அற்ற வழியில் நடந்துகொள்வதா நேர்மையின் பாற்படுவது?

அபேட்சகர்கள் 'செம்மை நினையாமை பூண்டார்' நெறியைக் கையாளாது தங்கள் கட்சிகளின் மானத்தைக் குலையவிடாது நேர்மையான வழியில், சீரான வகையில், செம்மையான முறையில் வாக்காளர்கள் நடந்துகொள்ளவும் அன்னார் தங்கள் வாக்குகளைத் தங்கள் நெஞ்சத்தெழும் நோக்கிற்கியைய அளிக்கவும் உதவிபுரிவார்களேயானால் அது ஒரு பெருந் தொண்டாகத் திகழும்!

# கிராமத்தொண்டர்களே அபிமானிகள்

## கிராம முன்னேற்ற மகாநாட்டுத் தலைவர் கூற்று

ஒருநாடு முன்னேறுவதற்கு நாட்டிலுள்ள சுயநலப் பற்றற்றவர்களின் முயற்சியே மிகவும் வேண்டப்படும். ஐக்கிய முறையிற் கிராமத் தொண்டர்கள் ஒருங்கு சேர்ந்து தாமாகவே தங்கள் கிராமச் சீர்திருத்த வேலைகளைச் செய்வதுதான் தேசாபிமானம் என்று சென்ற சனிக்கிழமை மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையில் வலிகாமம் வடக்குக் கிராமமுன்னேற்றச் சங்க மகாநாட்டின் வருடாந்தக் கூட்டத்திலே தலைமை வகித்த திரு. R. N. சிவப்பிரகாசம் அவர்கள் கூறினர்கள்.

காரியதரிசி T. பாலச்சந்திரனும், திரு. க. பொன்னம்பலமும் கிராம இயக்கத்தினால் இதுவரை நாட்டிற் சேர்ப்பட்டிருக்கும் நன்மைகளை எடுத்துரைத்தார்கள்.

திரு. R. N. சிவப்பிரகாசம் தலைவராகவும், W. M. யோலுவர், S. செல்லத்துரை உப தலைவர்கள் ஆகவும், A. அபிவாசகம் காரியதரிசியாகவும், திரு. K. ஆறுமுகம் உபகாரியதரிசியாகவும், திரு. K. பொன்னம்பலம் தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பெற்றனர்.

## புதிய நோட்டுகள்

நீல நிறமுடைய புதிய ஒருரூபா நோட்டுகள் அண்மையில் வெளிவருமென அறியவருகிறது.

# வாழ்க்கை வானில்

வளர்மதி

### வாக்குப் போருக்கு முன் ஏச்சுப் போர்

அபேட்சகர்கள் தங்கள் விண்ணப்பப்பத்திரங்களை நேற்றுச் சமர்ப்பித்து விட்டனர் தேர்தற் போரில் முதல் அங்கப்போர் ஆரம்பமாயது இதற்குமுன் வாக்குத் தேடும் வகையில் அபேட்சகர்களும் அவர்கள் ஆதரவாளர்களும் ஏச்சுப்போர் பல முனைகளிலும் நடத்திக் காட்டியிருக்கின்றனர். இவ்வளவில் எலலாக் கட்சிகளும் எல்லா அபேட்சகர்களும் இந்தத் தேர்தலில் எவ்வகையாலும் எவ்வாற்றானும் வெற்றி பெறவேண்டுமென்ற நோக்குடையவர்களாயும் தங்கள் நாட்டின் மானத்தையும் மரியாதையையும் பாதிக்கக் கூடியவர்களாயும் இருப்பது கவலையைத் தருகின்றது.

### மாபெருங் கூட்டங்கள்

இந்தவாரம் இருபெருங் கூட்டங்கள் அரசியற் கட்சிகளால் நிறுவப்பெற்று நடைபெற்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளார் பணிதவெள்ளமாக இரு கூட்டங்களையும் பார்த்துள்ளார்கள். எந்தக் கூட்டத்தில் நின்றவர் எந்தக் கட்சிக்குச் சேர்ந்தவர் என்றது மட்டும் எவராலும் சொல்ல முடியாது. ஆகவே கட்சிப் பலத்தை மாபெருங் கூட்டங்கள் கணிக்கமாட்டா என்றது புலனாகின்றது. இரு கட்சிகளும் ஒன்றுனற் பலம் எவ்வாறிருக்கும்?

### காரியத்திற் கண்ணான நாரியர்

வாக்குரிமை பெற்றாற் போதுமா? மன்ற அங்கத்தவர் ஆகவேண்டு மல்லவா என்று பெண்கள் இரத்தினங்கள் சென்ற தேர்தலிற் கலந்து சில இடங்களைக் கைப்பற்றினர். இத் தேர்தலிலும் அவர்கள் அபேட்சகர்களாக முன்வந்திருக்கின்றனர். ஆடவருடன் போட்டியிடாது தம்பாலாருடன் இவர்கள் போராடி வெற்றி பெற்றாலல்லவோ பொறறொருடியாரின் சொற்போர்த் திறமை தெரியவரும்.

### அபேட்சகரில் கட்சிப் பலம்

| | |
|---|---|
| ஐக்கியதேசியக்கட்சி | 81 |
| திரு. பண்டாரநாயககட்சி | 50 |
| நவசமசமாஜக்கட்சி | 40 |
| பொதுஉடைமைக்கட்சி | 16 |
| பழையசமசமாஜக்கட்சி | 6 |
| தொழிற்கட்சி | 6 |
| குடியாசுக்கட்சி | 11 |
| புத்தகுடியாசுக்கட்சி | 2 |
| தமிழர்மகாநாடு | 7 |
| தமிழ்அரசுக்கட்சி | 7 |
| தனியாக நிற்பவர்கள் | 80 |
| | 306 |

கணவனும் மனைவியுமாக நான்கு குடும்பத்தினர் எட்டுத் தொகுதியிற் போட்டி யிடுகின்றார்கள, இவர்களுக்கு மாறாக நான்கு சோடிகள இருந்தால் அல்லது இவர்கள் நான்கு தொகுதிகளிற் போட்டி யிடுவதாயிருந்தால் தேர்தற் போர் காரசாரமாயிருக்கும்.

### எல்லாருக்கும் எதிர்ப்பு!

ஒரு கட்சித் தலைவராவது எதிர்ப்பில்லாது விடப்படவில்லை. ஐக்கிய தேசியக்கட்சி மற்றைய கட்சித்தலைவர்களுக்கெல்லாம் எதிராக அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறார்கள். வவுனியா, ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை முதலிய இடங்களில் ஒவ்வொன்றிலும் நான்கு, ஐந்து, ஆறு அபேட்சகர்கள போராடுகிறார்கள். ஊர்கள் பல ஆனால் மண் எடுப்பது குறைவாகும் என்பது இங்கு பொருந்தாதா?

## பிரதமருக்கு இருவர் போட்டி

இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகவுக்கு எதிராக டெடிகமவில் இருவர் போட்டி இடுகின்றனர். ஒருவர் திரு. டறெல் பீரிஸ் (ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி) மற்றையவர் ஹெக்ரர் விஜயதுங்க(நவ. சம. சமா கட்சி)

## பூனையின் உன்னத நன்றியறிவு

தல்வத்தை என்னுமிடத்திலிருந்து ஒரு பூனை பெட்டியுள் வைத்து அடைக்கப்பட்டு, களுத்துறைக்குக் கொண்டுபோகப்பட்டது. இடையிலுள்ள தூரம் 100 மைல். மூன்று மாதம் சென்றபின் அந்தப் பூனை தனது பழைய வீட்டுக்குத் திரும்பிப்போனதாக அறியவருகிறது.

## விவாகப்பதிவு

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலை மனேஜர் திரு. சு பொ. கந்தையாவின் புத்திரனும் இரத்தினபுரி இறிகேசன் கந்தோரில் (Irrigation Office) கடமையாற்றுபவருமாகிய திரு. பத்மநாதனுக்கும், கந்தர்மடம் — செ. சுந்தரம் பிள்ளையின் புத்திரி திருவளர் செல்வி இராசலட்சுமிக்கும் புதன் கிழமை (16 - 4 - 52) பிற்பகல் 8 - 30 மணியளவில் நிகழ்ந்த சுப முகூர்த்தத்தில் பல சுற்றமித்திரர் முன்னிலையில் விவாகப் பதிவு மங்கலகரமாக நிறைவேறியதென அறிகிறோம்.

## சென்னையிற் கொடிய பஞ்சம்

சென்னையிற் சென்ற ஐந்து ஆண்டுகளாக அடுத்தடுத்து மழை பெய்யாமையால் கமத்தொழிலாளருடைய உணவுப் பொருள் உற்பத்தி முயற்சி குன்றிக் குன்றி வந்தது. இப்போ உணவுப் பயிர்கள் வாடி யழிகின்றனவாம், நாட்டிற் கொடிய பஞ்சமுண்டாயிருக்கின்றது. உணவின்றிப் பலர் உயிர் துறக்கின்றனர். நிலைமை மிகப் பரிதாபமானதாயிருக்கின்றது. செய்வதென்னென்றறியாது மக்கள் வருந்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவவழி நின்ற வாகீசர்

## ஆராய்வுடன் இரங்கும் நெறி

அப்பர் திருநாவுக்கரசர், வாகீசர், ஆளுடைய வடிகள் முதலாய திருநாமங்களினுற் போற்றப்பெறும் எம் நாயனரின் சீலியம் சைவசமயத்தவர் எல்லாருக்குமே பலப்பல வழிகளில் நன் முன்மாதிரியானது. அவைகளுள் ஒன்று ஏனையவற்றிலும் அதிகஞ் சிறந்து முன்நிற்பது. அதுதான் ஆராய்வுற இரங்கும் பிழை எனத்தக்கது. இதை இந்தக் காலத்தில் அன்பின் வழித்தாயதெனக் கொண்டு வியந்து கொள்ளுகிறார்கள். ஆனையாலும் ஆராய்வது நன்று.

ஆபிரகாம் லிங்கன் என்ற மேதாவி ஒருமுறை சேற்றுக் குளியிற் கிடந்து தத்தளித்த பன்றிக் குட்டியை வெளியாற்றாக்கிவிட்டார். அதன் பின் அவர் அறிவு அவரைக் கேட்டது:—“நாளை இப்பன்றிக் குட்டியை மனிதன் கொன்று தின்பானே, இன்று சாகவிடாமற் றாக்கிவிட்டதாற் பயனென்ன”? அதற்கு அவர் “என் மனச்சாட்சியின் வருத்தத்தைத் தணித்தேன்” என்றார். பன்றிக்குட்டியைத் தண்டிப்பதாக ஒருவர் சேற்றுக்குளியில் விட்டிருந்தால், லிங்கனவர்களின் செய்கை தண்டத் தலைவர் கருத்துக்கு மாறாகும். தண்டததலைவர் வலிகூடியவராயிருந்தால் லிங்கனவர்களைத் தண்டித்திருப்பார்தானே.

வாழ்! வாழ்! என்று கத்தினன். பத்து வாயாலும் பறகள் தெறித்தன. இருபது விழிகளும் பிதுங்கின. வாகீசரின் தியானங் குழம்பியது. வந்து கண்டு இரக்கமுற்றார் இராவணன்மேல். “கைலாசபதி கானகப் பிரியன்” என்றார். இராவணன் வாழும் நாளும் பெற்றுய்ந்தான். ஆலுல் வாகீச முனிவர் மருணீக்கியாராகப் பிறவியெடுத்தார். குற்ற நிவாரணத்தின் பொருட்டு திருவுள்ளப் பாங்கறியாக் குற்றமே காரணம். தம் புலனறிவுகொண்டு பார்க்குஞ் சமணையவர்க்குத் தகுந்த சமயமாயிற்று. இதுசரி அது சரியென் றிட்டார் தர்க்கம. சாங்கியம் போன்ற சவலைச் சமயமெல்லாம் தோற்றன. தர்மசேனனுயினர். திருவருளோ சுராந்தபாடில்லை. முனைகண்ட சரிகள் பிழைபாயின. காணுக் கருத்துக்கள் எழுந்து மலைத்தன. சித்தங் கலங்கிற்று. வெல்லக்கூடாத நோய் கூற்றுவன் போலக் குடரைக் கலக்கியது. சுட்டறிவு துடித்து நின்றுவிட்டது. போமாறு புரியவில்லை. தெய்வவழியொன்றுண்டு போலுமெனப் புலர்ந்தது. மனச்சாட்சி தன் (inner voice, conscience) பிரமாண மென்பதைக் கைவிட்டார். தரித்தார் விபூதியும் பஞ்சாட்சரமும் தொடுத்தார் உழவாரத் தொண்டு. நம் கடன் பணி செய்து கிடப்பதே யென்று துணிந்தார். திருவருளுக்காளாயினர்: சமய குரவரானர். சமண் நசுங்கியது. சைவவழிபாரோர் தாங்கினர். இன்று நாமுஞ் சைவவழி நின்று இந்தச் சமண்பார்வையைப் போக்க வேண்டும். சிவாசம நீதியோங்கச் செய்ய நமச்சிவாய வாழ்க வேண்டும். உலகந் துயர் தீரும்.

நமச்சிவாய வாழ்க.

திரு. சி. நாகையா

அவர்கள் எழுதியது.

---

## செய்தித்திரட்டு
=O=

பேராசிரியர் சர்வபாளி இராதாகிருஷ்ணன் அவர்கள் இந்திய அரசாங்க உபதலைவராகத் தெரியப்பெற்றார்.

x x x

எல்லைப்புறக் காந்தி திரு. அப்துல் காபர்கான் அவர்கள் சத்திரசிகிச்சை செய்யப் பெற்றிருக்கிறார். தேகநிலை குற்றமில்லை.

x x x

28-4-52 ல் இலங்கை இந்திய மக்களுடைய சத்தியாக்கிரக இயக்கந் தொடக்கம்.

---

## தேர்தலுக்காகும் திருக்குறள்

மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு — திருவள்ளுவர்.

---

# வடமாகாண அபேட்சகர்கள் முப்பதின்மர்

## போட்டி இடங்கள் ஒன்பது

**யாழ்ப்பாணம்**

Dr. E. M. V. நாகநாதன் —த-அ கை
திரு. G. G. பொன்னம்பலம் த-கா குடை

**காங்கேயன்துறை**

திரு. S. J. V. செல்வநாயகம் த-அ துவிச்சக்கரம்
,, S. நடேசன் ஐ-தே-க திறப்பு

**வட்டுக்கோட்டை**

திரு. A. அமிர்தலிங்கம் த-அ தராசு
,, C. இரகுநாதன் சுயேச்சை யானை
,, T. உருத்திரா சுயேச்சை குடை
,, K. கனகரத்தினம் த-கா கை
,, V. வீரசிங்கம் சுயேச்சை துவிச்சக்கரம்
,, A. வைத்தியலிங்கம் பொதுவுடைமை திறப்பு

**கோப்பாய்**

திரு. C. அருளம்பலம் த-கா யானை
,, R. R. தருமரத்தினம் ச-ச நட்சத்திரம்
,, C. வன்னியசிங்கம் த-அ திறப்பு

**பருத்தித்துறை**

திரு. T. இராமலிங்கம் த-கா கண்
,, P. கந்தையா பொதுவுடைமை துவிச்சக்கரம்
,, K. C நடராசா சுயேச்சை கை
,, C. பாலசிங்கம் சுயேச்சை வண்டிச்சில்லு

**ஊர்காவற்றுறை**

திரு. S. சேனாதிராசா சுயேச்சை திறப்பு
,, A. தம்பிஐயா த-கா யானை
,, A. தியாகராசா ச-ச தராசு
,, V. நவரத்தினம் த-அ கை
,, C பாலசிங்கம் சுயேச்சை துவிச்சக்கரம்

**சாவகச்சேரி**

திரு. N. அருணாசலம் த-அ துவிச்சக்கரம்
,, V. குமாரசாமி த-கா தராசு

**மன்னார்**

திரு. C. சிற்றம்பலம் சுயேச்சை
,, V. A. அழகக்கோன் சுயேச்சை

**வவுனியா**

திரு. C. சுந்தரலிங்கம் சுயேச்சை
,, T. M சபாரத்தினம் த-கா
,, K. வேலுப்பிள்ளை சுயேச்சை
,, V. P. சிங்நாயக சுயேச்சை

---


## தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலையில் சித்திரமும் கைத்தொழிலும் படிப்பித்தற்கு பகுதி — நேர ஆசிரியர் ஒருவர் தேவை. வேதனம் அரசாங்க ஆசிரிய கலாசாலையில் பகுதி-நேர ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோலக் கொடுபடும்.

யாழ்ப்பாணம் சைவ வித்தியா விருத்திச் சங்கப் பாடசாலை முகாமையாளருக்கு விண்ணப்பஞ் செய்யவும்.

M 14 25, 29&2-5

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண் - கிழக்கு கலட்டி 576/5 ம் நம்பர் கடையில் அடைவுபிடிக்கும் தா. சி. குமாரசாமி அன்ட் ஸ்ரீமதி தா. சி. சோமசுந்தரம் அவர்களுடைய கடையில் 1950 ம் ஆண்டு ஏப்ரல் தொடக்கம் 1951 ம் ஆண்டு ஏப்ரல் முடிய உள்ள, தவணை தப்பி எடுபடாமல் இருக்கும் நகைகளை 1952 ம் ஆண்டு மே மாதம் 17 ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி இடத்தில் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொ. இராசரத்தினம்

வெக்கீஸ் மேஸ்தர்.

M. 20 29, 2—5—52.

## உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

அப்படியானல் இந்துசாதனத்தில் விளம்பரஞ் செய்யுங்கள்


---

## திருநாவுக்கரசர் குருபூசை

புங்குடுதீவு பாணவிடைச் சிவன்கோயிலில் திருநாவுக்கரசு நாயனர் குருபூசை மிகவும் நன்றாய் நடைபெற்றது. அன்றிரவு கொக்குவில் ஸ்ரீமத் குமாரசாமிப்பிள்ளையால் பக்கவாத்திய சகிதம் நாயனர் திவ்விய சரித்திரம் பிரசங்கம் செய்யப்பெற்றது.

பாணவிடைச்சிவன்கோயில் பரிபாலனசபையின் 5-ம் வருடாந்தக் கூட்டம் தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. செ. சிவஞானம் அவர்கள் தலைமையில் கோயில் வாயிலில் சென்ற வாரம் கூடியது. யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மாணவன் க. பத்மசேகரம் தாசியர் நடனம் சைவசமய மாண்பு என்னும் விஷயங்கள் பற்றிப் பேசியபின்னர் நயினை பிரமஸ்ரீ வைரவநாதக் குருக்கள் “ஆலய நிர்வாகம்” பற்றிப் பேசினர்.

தலைவர் இக்கோயிலில் வரவு செலவு அச்சிட்டு வெளிப்படுத்திய விதத்தையும் தாசியர் நடனம் இடம்பெருததையிட்டும் மகிழ்வதாகக் கூறினர். புது வருட உத்தியோகத்தர்கள் கீழ்க்கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.

தலைவர் திரு. சி. நல்லதம்பி ஆசிரியர்' காரியதரிசி திரு. இ. கணபதிப்பிள்ளை ஆசிரியர், தனாதிகாரி திரு. சி. நா. பாலசிங்கம ஆசிரியர், புதுவருட பஞ்சாயகர்த்தாதி நா. இ. அருணசலம், பொதுப் பிரதிநிதி திரு. அ. கு. மதியாபரணம் வைத்தியர்.

---

வண் வடமேற்கு விசுவலிங்கப்பிள்ளையார்கோவில் எனவழங்கும்

## மகா கணபதிமூர்த்தி கோவில்

(1) மேற்படி கோவில்பரிபாலனம் 1936ம் ஆண்டு புரட்டாதி மாதம் 21 ம் திகதி கூடிய மகாசபைக்கூட்டத்தன் தீர்மானப்படியும் அன்று முடித்த 649 ம் இலக்க உறுதிப் பிரகாரம் நடத்திவந்த முறைப்படி தற்போது செவ்வனே நடத்துவதற்கு புதிய கொம்மிற்றியும் பஞ்சாயுதமும் நியமிக்க அக்கோவில் வழிபாடுகாரர் விருமபினபடியால் நிகழும் நந்தன வருஷம் சித்திரை மாசம் 19 திகதி வியாழக்கிழமை 1—5—52 பிற்பகல் 4 மணியளவில் கோவில் மண்டபத்தில மகாசபை கூடும். வழிபாடுகாரர் சமுகம் அளிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்,

ஆ. சின்னத்துரை
க. துரைராசா
வ கிருஷ்ணபிள்ளை
க. நவரெத்தினம்
க. இராசரத்தினம்
பொ. கதிரவேலு
வி. தாமோதரம்பிள்ளை
வே. சின்னத்துரை
த. சுப்பிரமணியம்
த. கணபதிப்பிள்ளை
க. வயித்திலிங்கம்
பொ. விசுவரத்தினம்
நா. பொன்னுத்துரை
ச. இரத்தினம்
வ. பெரியதம்பி
நா. சின்னத்தம்பி
வ. மயில்வாகனம்
க. மு. கந்தையா
வீ. ச. நடராசா
செ. கந்தையா
க. இராசதுரை
வே. க. வேலுப்பிள்ளை
ச. திருநாவுக்கரசு
ம. மார்க்கண்டு
ஆ. பத்மநாதன்
பெ. செல்வவிநாயகம்
வி. ச. திருநாவுக்கரசு
வே. தம்பிஐயா
வ. கந்தையா
மு. சின்னத்தம்பி
இ. கணபதிப்பிள்ளை
க. கந்தையா
வே. வயிரமுத்து
மு. கணபதிப்பிள்ளை
மு. நடராசா
சு. தம்பிராசா
ச. ராசரெத்தினம்
ச. பொன்னுத்துரை
வ. சுப்பிரமணியம்
நா. மயில்வாகனம்
வே. துரையப்பா
அ. துரைராசா
மு. ஆறுமுகம்
க. இராசலிங்கம்
து. இராசையா
பொ. கனகரெத்தினம்
மா பொன்னு
வீ. கணபதிப்பிள்ளை
க. சனகசபை
நா. கணபதிப்பிள்ளை
ந. இராசரத்தினம்
இ. சபாபதி
க ஆறுமுகம்
மு. சிவசம்பு

---

## ஆபிரிக்க சட்ட மறுப்பு இயக்கம்

தென் ஆபிரிக்க தேசியமகாநாடு சட்ட மறுப்பு இயக்கத்துக்குப் 10 ஆயிரம் தொண்டர்கள் வேண்டப்படுகின்றனரெனத் தலைவர் ஓர்வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இந்த இயக்கம் ஆபிரிக்கர் இந்தியர் ஆகிய இருசாராராலும் நடத்தப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நந்தன வருடப்பிறப்பு விழா

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 13—4—52 ஞாயிற்றுக் கிழமை வருடப்பிறப்புவிழா யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபை யாதரவில் வழமைபோல் மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்பெற்றது. பூசை வழிபாட்டுடன் விழா ஆரம்பமாகியது. சிவபுராணம் ஓதப்பெற்று விபூதிசந்தனம் வழங்கப்பெற்றன. வழிபாட்டில் ஏறக்குறைய 250 மறியற்காரரும் சில உத்தியோகஸ்தர்களும் பங்குபற்றினர் ஈற்றில் சிற்றுண்டி தேனீர் வழங்கப்பெற்ன. திருவாளர் பொ. அப்புக்குட்டி அவர்கள்தலைமையில் திரு. வே. சங்கரப்பிள்ளை ஆசிரியர் அவர்கள், "வருடவிழா ஏன் கொண்டாடுவான்" என்னும் விஷயம் பற்றிச் சிறந்த சொற்பொழிவாற்றினர். ஈற்றில் தலைவர் குறிப்புரையில் கடவுள் வழிபாடு அவசியம் என்பது பற்றி சுட்டிவிளக்கினர், ஒழுக்கம் விழுப்பந்தரலான் உயிரினுமோம்பப்படும் என்பதையுமீ விளக்கிப் பேசினர். பின்பு பிரம்மஸ்ரீ மூர்த்திஐயர் அவர்களால் இசை விருந்தளிக்கப்பெற்று விழா இனிது நிறைவெய்தியது,

### தானவரவு

சித்திரை மாதத்து அபர பக்கத்துப் பிரதமைத் தினமாகிய 24-4-52 எனது உடன் பிறந்த அருமைத் தமையனூர் முருகேசு அவர்களின் எட்டாவது ஆண்டுச் சிரார்த்த தின ஞாபகமாக யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபைக்கு நன்கொடையாக அனுப்பும் ரூபா 2 ஐயும் சேர்ப்பிக்கக் கோருகிறேன் என்று பரகஹடேனிய அரசினர் பாடசாலை ஆசிரியர் திரு. வீர. கணபதிப்பிள்ளை அவர்கள அனுப்பிய பணத்தைப் பெற்றும்.

— அதிபர்

## அரசியல் அலை

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

பிரிவினையாற் கட்சிகள் தொகையும் அதிகரித்துவிட்டது. ஐக்கியதேசியக்கட்சி, விடுதலைக் கட்சி, குடியரசுக்கட்சி, தமிழரசுகாரடு, தமிழரசு, இலங்கைச்சோனகர், நவசமசமாசக் கட்சி, பொதுவுடமைக்கட்சி, பழையசமசமாசக்கட்சி, தொழிற்கட்சி, புத்த குடியரசுக் கட்சி என்ற பத்துக்கு மேற்பட்ட கட்சிகள் 95 இடங்களுக்குப் போட்டியிடுகின்றன. இவர்களுக்கெல்லாம் எதிராகத் தனிப்பட்டமுறையிற் போட்டியிடும் தான்றோன்றிகளுமுளர்.

## தேகவியோகம்

சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர் வித்துவான் திரு. க. கி. நடராஜன், திருக்கோணமலை பிரபல வர்த்தகர் க. கி. வேலாயுதபிள்ளை ஆகியோரின் தந்தையும் திரு வே. சு.கதிரவேற்பிள்ளை அவர்களின் மைத்துனருமாகிய பொன்னாலை திரு. கதிரவேற்பிள்ளை கிருஷ்ணபிள்ளை அவர்கள் சென்ற 22-4-52 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் தமது இல்லத்திற்றானே தேகவியோகமாயினர். இவரது ஈமக்கிரியைகள் அடுத்தநாட் பொன்னாலை மயானத்தில் செவ்வனே நடைபெற்றன. இவரைப் பிரிந்து வருந்தும் உற்றார் உறவினருடன் நாமும் வருந்துகின்றோம். இவரது ஆன்மா சாந்தியடைக.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



# சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சுந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேசபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் நீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருருத்தல் விலை ரூபாய் 25-00, அரைருத்தல் விலை ரூபாய் 12-50, கால்ருத்தல் விலை ரூபாய் 6-75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.

வி. பி. பி: மூலமும் மருந்துகள அனுப்பப்படும்.

## சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

**K. ஆறுமுகம்பிள்ளை**

எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு

M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.


## அப்பர் அடிகளின் குருபூசைத் தினம்

**மறவன்புலோவில்**

ஷை குருபூசை மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் கொண்டாடப்பட்டது. தலைமையாசிரியர் திரு. ச. பொன்னம்பலம் தலைமை வகித்தார், ஷை வித்தியாசாலை மாணவி செல்வி க. நாகம்மாவால் திருநாவுக்கரசு நாயனர் சரிதம்பற்றிப் பேசப்பட்டது. திருவாளர்கள்: க. கனகசபை, ச. காங்கேயர், வ. பொன்னையா, தி. சின்னத்தம்பி என்பவர்களால் நாயனர் கண்ட உண்மைகளையும் அவற்றை மக்கள் வாழ்க்கையில் எவ்வெவ்வழி அனுஷ்டிக்கலாம் என்பனபற்றியும் பேசப்பட்டது.

* * *

**கண்டியில்**

20-4-52 மாலை கண்டி மத்திய மாகாண சைவ மகாசபை மண்டபத்தில் திருநாவுக்கரசர் குருபூசை கொண்டாடப்பட்டது திரு. A. K. வேலுப்பிள்ளை அவர்கள் திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரத்தைப்பற்றிச் சொற்பொழிவாற்றினர், திரு. N. ராஜா அவர்களும் அவர்களின் மாணவிகளும் செல்வி முத்துலட்சுமி (மாத்தளை) அவர்களும் இசை விருந்தளித்தனர்.

## ஏல விற்பனவு

**மோட்டார் லொறி நம் Z 1469**
**( போட் V. 8. )**

1952-ம் ஆண்டு வைகாசி மீ 3 உ சனிக்கிழமை காலை 10 மணியளவில்

மேற்சொல்லப்பட்ட லொறி (றூட் லைசென்ஸ் இல்லாமல்) யாழ்ப்பாணம் முனிசப்பல் கரேச்சில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வாங்கியவர் உடன் முழுத் தொகையையும் கட்டி லொறியை எடுத்துவிட வேண்டும். லொறியைப் பார்வையிட விரும்புவோர் முனிசிப்பல் கரேச்சில் கந்தோர் வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

சா. சண்முகம்
கமிஷனர்

முனிசிப்பல்கந்தோர்
யாழ்ப்பாணம்
22 4-52. G 3 29-4

## கருங்காலி சுப்பிரமணிய சுவாமி கோயில்

சென்ற வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் காரைநகர் கருங்காலி சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் மஹோற்சவ மகாநாடு கூடியது. அத்தருணம் தலைமைவகித்த சைவமகாசபைத் தலைவர் ஸ்ரீமத், சி. சுப்பிரமணியதேசிகர் அவர்கள் ஆலயங்களில நடைபெறும் கிரியைகள் யாவும் சைவாகமங்களின் பிரகாரம் நடைபெறுதல் அத்தியாவசியகமென்றும் அதற்கு ஆலயங்களை நடத்துபவர்களும் உபயக்காரரும் சைவாகமங்களில் நம்பிக்கை யுடையவர்களா யிருத்தல் வேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறினர்.


சி. எம். சாமி மருந்துகள் உலகத்தில் பல பாகங்களிலும் விசேஷமாய் இலங்கையிலும் புகழ்பெற்று வருகின்றன.

# இரத்த சுத்தியைத் தருவது!

**தங்க பஸ்பம்**
வயோதிகரை வாலிபராக்கும் சகல வியாதிகளையும் நீக்கி சரீர சுகத்தையும் இல்லற இன்பத்தையும் தேக புஷ்டியையும் தரும்.
24-நாள் பஸ்பம் விலை ரூ. 15-0-0

**மதனமுதம்**
இதில தங்க பஸ்பம் வைத்தும், தனியாகவும் சாப்பிடலாம், ருசியுள்ளது.
½ சேர் புட்டி 1-க்கு ரூ. 5-00

**குரு பஸ்பம்**
க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரானது வேறில்லை. காசம் இளைப்பு, இருமல், தொய்வு, கோழை கட்டி கட்டியாய் விழுதல், இவைகள எவ்வளவு நாட்பட்டதாயினும் குணப்படும். அனுபவமானது.
24-நாள பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 20-0-0

**பழனியப்பசாமி வைத்தியசாலை, பழனி.**

ஏஜண்டுகள்
P. S. சுப்பிரமணியம, கி-ர் 78, மெயின் வீதி, கலகா. [கொடை.
S. பொன்னுசாமிபிள்ளை, நெ. 133 தும்பகொடை தெரு, பலாங்
இந்தியன் மெடிக்கல் ஸ்டோர்ஸ் கி-ர் 39 மெயின் வீதி ஹட்டன்.
T. N. ராமச்சந்திரன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

M. 16. 25-4-52—25-10-52.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின் மிகப்பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.



| திறமான | திறமான |
| --- | --- |
| தேக்க மரங்கள் | ரூணிமார்க்ஓடுகள் |
| பல தினிசுகளிலும் | 13¾, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna, or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday April 29, 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org